ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2458/47 - 2025 ඔක්තෝබර් මස 17 වැනි සිකුරාදා - 2025.10.17

*2458/47 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 6/2025

**1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர் நிறுவகச் சட்டம்**

**7 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட கட்டளை.

**அனுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2025, ஒற்றோபர் 16.

**கட்டளை**

1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் 5 ஆந் திகதிய 14,874/4 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது ;-

1A - G 45615 — 04 (2025/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1. அக்கட்டளையின் 2 ஆம் பந்தியில் -

(1) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(2) தேர்தலில் வாக்களித்தல் ஆனது கைமுறை ரீதியில் இலத்திரனியல் வாயிலாக அல்லது மெய்நிகர் ரீதியில் நடாத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒருமுறையில் நடாத்தப்பட்டுள்ள ஏதேனும் தேர்தல் அத்தகைய தேர்தலினை செல்லுபடியற்றதாக்குதலோ அல்லது செல்லுபடியாந்தன்மையைப் பாதித்தலோ ஆகாது.".

(2) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியினை உடனடுத்து பின்வரும் புதிய உபபந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(3) பேரவையானது, ஒவ்வொரு தேர்தலுக்கும் பயன்டுத்தப்படவேண்டிய வாக்களிப்பு முறையை தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தேர்தல் தேதிக்கு முன்னரான முப்பது நாட்களுக்கு குறையாமல் தேர்தல் மற்றும் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை தொடர்பான விபரங்களுடன் சேர்த்து நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். நிறுவகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தகைமையற்றவராக இருந்தாலொழிய, தேர்தலில் வாக்களிக்க உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இக்கட்டளையிலுள்ள எதுவும் இலங்கையில் வதியாத நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினரை அப்போதைக்கு தேர்தலில் வாக்களிப்பதிலிருந்து அல்லது போட்டியிடுவதிலிருந்து தடைசெய்வதாக பொருள் கொளள்ப்படுதலாகாது.".

2. அக்கட்டளையின் 6 ஆம் பந்தியில், அப்பந்தியின் (5) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(6) மெய்நிகர் வாக்களிப்பு என்னும் விடயத்தில் வேட்பாளர்களின் நிரல் பாதுக்காக்கப்பட்ட மெய்நிகர் வாக்களிப்பு தளம் மூலம் வாக்காளருக்கு கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், வாக்காளர் அதற்கிணங்க அத்தகைய தளத்தின் மூலம் அவரது விருப்பத்தெரிவு வேட்பாளரை தெரிவு செய்யலாம்.".

3. அக்கட்டளையின் 10 ஆம் பந்தியில் -

(1) அப்பந்தியின் 7(அ) என்னும் உட்பந்தியில் "நிறைவேற்றப்படுதல் வேண்டும்.". என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"நிறைவேற்றப்படுதல் வேண்டும்:

ஆயின், எபவ்வாறாயினும், வாக்காளர் ஒருவர் வாக்காளருக்கு நிறுவகத்தினால் வழங்கப்பட்ட எழுத்திலான முன் அறிவித்தலின் படி வாக்காளரின் வேண்டுகோளின் மீது பெயர் குறிக்கப்பட்ட மெய்நிகர் வாக்களிப்பு தளம் மூலம் மெய்நிகராகப் பதிவு செய்யப்படலாம்.".

(2) அப்பந்தியின் (7) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினை சேர்ப்பதன் மூலமும் :-

"(8) மெய்நிகர் வாக்களிப்பு என்னும் விடயத்தில் -

(அ) வாக்களிப்பதற்கு தகுதியுடைய உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பான இலத்திரனியல் வாக்களிப்பு ஆதாரச் சான்று ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு வாக்காளரின் அடையாளமும் அவசியமானவிடத்து இரு-காரணி மெய்யுறுதிப்படுத்துகை உட்பட தோதான இலத்திரனியல் மெய்யுறுதிப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்தி சரிபார்க்கப்படுதல் வேண்டும்;

(இ) வாக்குகள் ஆனவை செம்மைத்தன்மை, அந்தரங்கத்தன்மை மற்றும் சரிபார்ப்புத்தன்மை என்பவற்றை உறுதி செய்யும் முறையில் பதிவு செய்யப்பட்டு குறியாக்கஞ்செய்யப்பட்டு சேமிக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) நிகழ்நிலை வாக்களிப்பு தளமானது மூன்று மணித்தியாலங்களிற்குக் குறையாமல் வாக்காளருக்கு கிடைக்கக்கூடியதாகவும் அணுகக்கூடியதாகவும் இருக்கப்படுதல் வேண்டும்;

(உ) நிறுவகத்தின் உறுப்பினர்களை நிகழ்நிலை முறையில் வாக்களிப்பதற்கு நிறுவகத்தில் நேரடியாக சமூகமாயிருக்க வேண்டும் எனத் தேவைப்படுத்துதல் ஆகாது என்பதுடன், பெயர்குறிக்கப்பட்ட மெய்நிகர் வாக்களிப்பு தளம் மூலம் தொலைவிலிருந்து வாக்களிக்க அனுமதிக்கப்படுதல் வேண்டும்."

4. அக்கட்டளையின் 13 ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் -

"மெய்நிகர் வாக்களிப்புக்கு பிரயோகிக்கப்படும் கைமுறை ரீதியாக மற்றும் இலத்திரனியல் வாக்களிப்புக்கான தேவைப்பாடுகள்.

13அ. தேர்தல் செயன்முறையின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காப்பதற்காக காலத்திற்குக் காலம் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க கைமுறை ரீதியாக அல்லது இலத்திரனியல் வாக்களிப்புக்கு ஏற்புடையற்பாலதான எல்லாத் தேவைப்பாடுகளும் மெய்நிகர் வாக்களிப்புக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.".

5. அக்கட்டளையின் 14 ஆம் பந்தியில், "செயாலாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"மெய்நிகர் வாக்களிப்பு தளம்" என்பது, வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்காளர்களின் நேரடியான வருகையை தேவைப்படுத்தாமல் தேர்தலில் பாதுகாப்பாக வாக்குகளை இடுவதற்கும், பதிவு செய்வதற்கும், அனுப்புவதற்கும் மற்றும் எண்ணுவதற்கும் இலத்திரனியல் முறைமைகள், சாதனங்கள் அல்லது எண்ணிம தளங்கள் என்பவற்றைப் பயன்படுத்ததுதல் எனப் பொருள்படும்.".

EOG 10-0181